
யூலை - July 2000

பள்ளத்தாக்கின் லீலி



"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்,நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்...,,

(யோவான் 13:34)

இது சத்தியவேத திருச்சபையின்

இலவச வெளியீடு

வெளியிடுபவர்
போதகர் எலிசா லோகன்

Mailing Address
Pastor Alisha Logan
Tamil Church Of The Holy Bible
274 Old Weston Rd
Toronto Ontario
M6N.3A4 Canada

Tel: (416) 657- 8273
Fax: (416) 657- 8954
ரெலிபோன் தேவ நற்செய்தி (416)654- 4514

இப் பத்திரிகையில் உங்கள் சாட்சிகள், கிறிஸ்தவச் சிறுகதைகள் எழுத வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் எங்களுடன் தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள்.

இந்தப் புத்தகத்தை தொடர்ந்து எடுக்கவிரும்பினால் நீங்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

ஜெபத்தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய எண் (416)657.8273

இந்தப் புத்தகத்துக்கு ஓய்வு தர வேண்டாம். குறைந்தது ஐம்பது பேருக்காவது வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பும்காணிக்கைகள் புதுப்புத்தகங்களை மலரச் செய்யும்.

REGISTERED NO:1151438

ரைப் செற்டிங் & ப்றின்டிங் சத்தியவேத திருச்சபை



ஆசிரியர் கடிதம்

"பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும்." (சகரியா 4:6)

அன்பான தேவனுடைய பிள்ளைகளே. ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினால் அன்பின் வாழ்த்துக்கள். எங்களை ஆற்றித் தேற்றி ஆறுதல் படுத்தும், தேவனுக்கும், எங்கள் மேல் தமது கிருபையையும், அன்பையும், ஊற்றி வழிநடத்தும் அருமைக் குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவுக்கும், எங்களை தனது பரிசுத்தப் பாதையிலே வழி நடத்தும் பரிசுத்த ஆவியானவருக்கும், துதிகன மகிமை உண்டாவதாக.

மேலும் இம்மாத லீலியில் அதிகமான சாட்சிகள் இடம் பெறுகின்றன. ஜெபங்களுக்கு பதில் கொடுத்த இயேசப்பாவுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. நீங்களும் உங்கள் ஜெபத் தேவைகளை எங்களுக்கு கடிதம் மூலம் எழுதியோ, அல்லது தொலைபேசி மூலமாகவோ அறியத்தாருங்கள். மேலும் போட்டோ அல்ப ஜெபங்களும் ஏறெடுக்கப் படுகின்றது. உங்கள் குடும்பங்களுக்காக, வாலிபப் பிள்ளைகளுக்காக, அல்லது வேறுயாருக்காவது நாங்கள் தொடர்ந்து ஜெபிக்கவேண்டுமாயின் குடும்ப போட்டோக்களை அனுப்பிவையுங்கள் நாங்கள் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிப்போம். இன்னும் தொலை பேசியில் ஒவ்வொரு நாளும் "அனுதின மன்னா" என்ற தேவநற்செய்தி நிகழ்ச்சி நடை பெறுகிறது. இதில் ஜெபம், அனுதினமும் ஆசீர்வாதமான தேவ வார்த்தைகளைக் கேட்டு ஆசீர் வாதத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள். "அனுதின மன்னா" தொலை பேசி நம்பர் (416) 654-4514 தொடர்ந்து எங்களுக்காகவும், எங்கள் சபைக்காகவும் ஜெபியுங்கள். இந்த வருடத்தில் ஆண்டவர் 250 ஆத்துமாக்களுக்கு மேல் திருச்சபைக்கு அழைத்து வரவேண்டும் என்றும் ஜெபியுங்கள்.

மேலும் பள்ளத்தாக்கின் லீலியை வாசிக்கிறவர்கள், இந்த சஞ்சிகை மூலம் நீங்கள் பெறுகிற ஆசீர்வாதங்களைக்குறித்து எங்களுக்கு கடிதம் மூலமோ, ரெலிபோன் மூலமோ அறியத் தாருங்கள். உங்கள் ஆதரவு எங்களை உச்சாகப்படுத்தும். ஆண்டவராகிய இயேசுதாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

அன்புடன்

கர்த்தரின் பணியில்

சகோதரி நகோமி லோகன்

கிறிஸ்தவ பாதையில் ஜெபமும், பரிசுத்தமும்

பாஸ்டர் எலிசா லோகன்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்த்துவின் நாமத்தில் பள்ளத்தாக்கின் லீலி வாசகர்களுக்கு, சத்தியவேத திருச்சபை சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரியமானவர்களே! இயேசுக்கிறிஸ்த்துவின் ஜெபவாழ்க்கையை நாம் பார்க்கும் போது, எங்களுக்கு அவர் ஒரு நல்ல மாதிரியாக இருந்தார். அவர் ஜெபத்திலே, ஆரம்பம் முதல் மரணபரியந்தம் வரை அதிகமான நேரத்தை செலவிட்டார். அவர் இந்த உலகத்தில் ஊழியத்தை ஆரம்பிக்க முதல் ஜெபத்துடன் ஆரம்பித்தார். தான் சாப்பிடும் உணவை மறந்து, வசதிகள் எல்லாவற்றையும் வெறுத்து, ஒரு வனாந்தரத்துக்குச் சென்று, நாற்பது நாள் உபவாசித்து ஜெபித்தார்.

எங்களுடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட ஜெபம் செய்கிறோம். என்னுடைய வியாபாரத்தின் ஆரம்ப காலங்களில் நான் நன்றாக ஜெபித்தேன். என் ஆண்டவர் என் ஜெபத்தைக்கேட்டு நன்றாக எங்களை ஆசீர்வதித்தார். பின்பு எனக்கு அதிகமான வேலை காரணமாக நான் ஜெபத்தில் குறைவுற்றேன். காலையில் எழுந்தவுடன் ஒரு சிறிய ஜெபத்தை செய்துவிட்டு ஆண்டவருக்குச் சொல்லுவேன், ஆண்டவரே என்னை மன்னித்துக்கொள்ளும், எனக்கு எவ்வளவோ வேலை இருக்கின்றது என்று சொல்லிவிட்டு, ஜெபத்தை மூன்று நிமிடத்தில் முடித்து விடுவேன். வேத வாசிப்பில்லை ஜெபம் இல்லை இதனால் எனக்கு வருகிற ஆசீர்வாதத்தையும் இழந்தேன். பல மாதங்களுக்குப் பின்பே நான் உணர்வடைந்தேன். எனக்கு வரவேண்டிய ஆசீர்வாதம், சமாதானம், சந்தோஷம் எல்லாவற்றையும் இழந்துவிட்டேன். காரணம், நான் தேவனுக்கு முதல் இடம் கொடுக்காமல் என் வேலைக்கு முதல் இடம் கொடுத்ததால் நிம்மதி இழந்தேன். வேதத்திலே ஆண்டவராகிய இயேசு கூறுகின்றார், "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்." என்று (மத்தேயு 6:33)

நாம் முதலாவது தேவனுக்கு நேரத்தைக் கொடுக்க வேண்டும். அவருக்கு எது பிரியமானது! துதித்தல், ஜெபித்தல், வேதத்தை தியானித்தல். அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு நிருபம் எழுதும்போது, இப்படியாக எழுதுகிறார். " கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்." (எபேசியர் 5:10) சங்கீதக்காரனாகிய தாவீது ஆண்டவரில் அதிக அன்பு வைத்தவன். ஆண்டவருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமந்து செல்லும்போது தான் ஒரு அரசனென்றும் பாராமல் உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நடனமாடி ஆண்டவரைப் பிரியப்படுத்தினான். அதுமட்டுமல்ல, ஆண்டவருடைய சமுகத்திலே ஜெபிக்கும் போது சொல்கிறான். "அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும், உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பியும். உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்... உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன். உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக." என்று (சங்கீதம் 143: 8,10) சங்கீதக்காரன் கேட்டது போல நாமும் கேட்கவேண்டும் உம்முடைய பரிசுத்த வழிகளில் என்னை நடத்தும். நான் வலது புறமோ இடது புறமோ சார்ந்து விடாமல், உம்மிலும் உம்முடைய

வசனத்திலும் உறுதியாக இருக்க கற்றுத்தாரும். அதுமட்டுமல்ல இன்னும் துதிக்கிறவர்களாக, ஜெபிக்கிறவாகளாக உம்முடைய புதுக்கிருபையைத் தாரும் என்று கேட்போமாக.

இப்பொழுது எனது ஜெபவாழ்க்கை மிகவும் மாறுபட்டுள்ளது. இப்பொழுது எனக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்காகவும் பாரப்பட்டு ஜெபிக்கும் பொறுப்பையும் ஆண்டவர் தந்துள்ளார். அதே போல அன்பான சகோதரனே, சகோதரியே! நீங்களும் ஜெப வாழ்க்கையில் நீடித்த நேரத்தை எடுத்து ஜெபிக்கப் பழகிக்கொள்ளுங்கள். பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பது பழமொழி. ஆகவே மற்றவர்களுக்காக பாரப்பட்டு ஜெபியுங்கள். முக்கியமாக நம் சொந்த தேசத்துக்காக, அங்கே சமாதானம் கிடைக்க வேண்டும். அழிந்து கொண்டிருக்கும் மக்களை, தேவன் அந்த அழிவிலிருந்து காக்கவேண்டும். விசேஷமாக இலங்கையில் இருக்கும் வாலிபப் பிள்ளைகளை தேவன் மூடிப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். எஸ்த்தர் ராஜாத்தி தன் இனத்துக்காக பாரப்பட்டது போல, நாமும் திறப்பின் வாசலில் நின்று ஜெபிப்போம். இலங்கை ஊழியர்களுக்காக, விசேஷமாக மக்களின் இரட்சிப்புக்காக, ஊழியங்களுக்காக பாரத்தோடு ஜெபிப்போமாக.

மேலும் நாங்கள் ஜெபம் செய்யும் போது. மத்தேயு 6: 5-13 வரை சொல்லப்பட்டுள்ளது "அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப்போலிருக்க வேண்டாம். மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம் பண்ணும் போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள். அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படு மென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள். உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது. பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரடசித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும். மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே."

அதிகாலை ஜெபம்

" அவர் (இயேசு) அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்துக்குப்போய், அங்கே ஜெபம் பண்ணினார்." (மாற்கு 1: 35) ஆண்டவராகிய இயேசு எங்களுக்கு ஒரு மாதிரியைக் காண்பித்தார். அதிகாலையில் எழுந்து ஜெபம் செய்வதைக்குறித்து. தாவீது சொல்கிறார் " என் மகிமையே, விழி. வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள். அதிகாலையில் விழித்துக்கொள்வேன்." என்று (சங் 57:8) சங்கீதக்காரனாகிய தாவீது மீண்டும் சொல்கிறார். **"அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும், உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பியும். உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்." (சங் 143:8) அதுமட்டுமல்ல "என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன். அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்." (நீதிமொழிகள் 8: 17)**

தேவ பிள்ளைகளே, எங்களின் அதிகாலை ஜெபத்தைத்தான் ஆண்டவர் அதிகமாக விரும்புகின்றார். அதிகாலை ஜெபம் எவ்வளவு அமைதியானது! எவ்வளவு சந்தோசமானது! ஏன் ஆண்டவர் அதிகாலை ஜெபத்தை விரும்புகிறார்? நாம் ஒரு காலத்தில் இலங்கையில் அல்லது இந்தியாவில் இருக்கும்போது அதிகாலை வேளையில் பறவைகள் பாடும் சத்தத்தைக் கேட்கலாம். இந்தக் கனடாவில் நாங்கள் பறவைகளின் சத்தத்தைக் கேட்பது அரிது. அதனால் தான் என்னவோ எங்கள் ஜெபமும் குறைவாக இருக்கிறது. அது போக, அதிகாலையில் பறவைகள் பேசும்போதும், பாடும்போதும் நாங்கள் எவ்வளவு சந்தோசப்படுகிறோம். அதிகாலை வேளை மிகவும் அமைதியானது, ரம்மியமானது, எவ்வளவு ரசனையுள்ளது. அதிகாலை வேளையிலே தொலை தூரத்திலிருந்து ஒரு நல்ல பாடலைக்கேட்கும்போது, அதை எவ்வளவு ரசனையோடு கேட்கிறோம். அதுமட்டுமல்ல பறவைகளுக்கு ஜாதி கிடையாது, பகைமை கிடையாது, தங்களுக்கு என்று சேர்த்துவைப்பது கிடையாது. எல்லாவற்றையும்மறந்து ஆடிப்பாடி மகிழ்கிறது. அதேபோலத்தான் நாங்கள் பறவைகளின் சத்தத்தை அதிகாலையில் எத்தகைய ரசனையோடு ரசிக்கிறோமோ அதுபோலவே ஆண்டவரும் எங்கள் ஜெபத்தை அதிகாலையில் மிகவும் விரும்புகிறார். ஏனென்றால் ஆண்டவர் தன்னுடைய சாயலாகவே எங்களைப் படைத்திருக்கிறார். நாங்கள் ஆடிப்பாடி ஆண்டவரை நோக்கி ஜெபிக்கும்போது நாங்கள் கேட்பதை ஆண்டவர் உடனடியாகத்தருகிறார். காலைதோறும் எனது கிருபை புதிதாக இருக்கிறது என்று வேதம் கூட சொல்லுகிறதே.

அன்பான சகோதரர்களே! சகோதரிகளே, நீங்கள் ஜெபம் செய்யும்போது விசுவாசத்துடன் ஜெபியுங்கள். "நீங்கள் ஜெபம் செய்யும்பொழுது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களே அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள் அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்." (மாற்கு 11:21) முன்பு எல்லாம் எனது மனைவி எனக்காக அதிகமாக ஜெபிப்பார்கள். அவள் எனக்காக ஜெபிக்கும் போது எனது கணவரை ஒரு ஊழியக்காரனாக மாற்றும். இவர் அதிகமாக வேலை, வேலை என்று இருக்காமல் உமது ஜெபத்திலும், வேத வாசிப்பிலும் அதிகமான மாற்றத்தைக் கொண்டுவாரும். மேலும் அதிகமான நேரத்தை உமக்கென்று வேலையை செய்ய இருதயத்தைக் கொடும். எனது கணவரை உம்முடைய திருக்கரத்தில் தருகிறேன் என்று சொல்லி ஜெபிப்பாள். அவள் அப்படி ஜெபிக்கும்போது, நான் எனக்குள்ளே நினைத்துக் கொள்ளுவேன். என் மனைவி எதை ஆண்டவரிடம் கேட்பது என்று கேட்கத் தெரியாமலே கேட்டுக் கொண்டிருக்கிறாளே! நல்ல ஒரு வீடு வாங்கவேண்டும், அல்லது ஒரு புதிய கார் வாங்கவேண்டும், அல்லது ஒரு லாட்டரி டிக்கட் (6-49) விழவேண்டும் என்றாவது கேட்டிருந்தால் ஆண்டவர் உடனே தந்திருப்பார். ஆனால் எனது மனைவி நடக்கமுடியாத ஒன்றைக் கேட்கிறாளே! என்று. என்னுடைய வாழ்க்கையில் பரிசுத்த வேதாகமத்தைப் படித்ததே இல்லை. எல்லாவற்றுக்கும் ஒரு ஞானம் வேண்டும். "கழுதைக்குத் தெரியுமா? கற்பூர வாசனை." அதே போல ஆண்டவரின் ஊழியப்பாதையைப்பற்றி எனக்கு என்னதெரியும். ஏனெனில் நான் பிறந்து வளர்ந்ததே இந்துவாக. நான் ஆண்டவராகிய இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வதற்கு முன் 1955 ல் பிறந்து, அன்றிலிருந்து 1986 வரையில் விக்கிரக கோவில் வழிபாட்டு முறைகளைக் கற்றுக்கொண்டேனே தவிர பரிசுத்த வேதாகமத்தைப் பார்த்ததே இல்லை. அந்த அடிப்படையில் தேவனுடைய ஊழியத்தைச் செய்ய முடியாது என்று எனக்குள்ளே அங்கலாய்ப்பேன். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, வேத வசனத்தில் சொல்லப்பட்டபடி. "அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார். எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவனைப் பிரபுக்களோடும், தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரப்பண்ணுகிறார்." என்று (சங்கீதம் 113: 7,8)

அன்றிலிருந்து என் ஆண்டவர் என்னுடன் பேசத்தொடங்கினார். நான் உன்னை இந்த ஊழியத்தில் "வாலாக்காமல் தலையாக்குவேன்" என்று. அன்றிலிருந்து என் உள்ளத்திலும் ஆர்வம் கொஞ்சம் கொஞ்சமாக சுடர்விட ஆரம்பித்தது. அதுமட்டுமல்ல நம் தேவன் கறவை ஆடுகளின் பின்னாலே திரிந்த தாவீதை எப்படி ஆண்டவர் எடுத்துப் பாவித்தாரோ, ஏழை மீனவனைக் கொண்டு எப்படி தனது சபையைக் கட்டி எழுப்பினாரோ, அதோபோல என்னையும் ஆண்டவர் எடுத்துப்பாவிப்பார் என்று விசுவாசத்தோடு ஊழியப்பாதையில் ஈடுபடத் தொடங்கினேன். அன்றிலிருந்து தேவன் ஊழியத்தை ஆசீர்வதித்துக்கொண்டே இருக்கிறார்.

பார்த்தீர்களா? ஆண்டவரின் பிள்ளைகளே! தேவன் தன்னுடைய பிள்ளைகளின் ஜெபத்தைக்கேட்டு மறு உத்தரவு கொடுக்கிறார் என்று. " என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்." என்று (யோவான் 14:14) லும் "கேழுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான். தேடுகிறவன் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். (மத்தேயு 7: 7,8) இன்னும் ஆண்டவர் உங்களைப் பார்த்துக் கூறுகின்றார். " இதுவரைக்கும் நீங்கள் என்நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை. கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்." (மததேயு 16:24) நாம் முழுமனதோடு ஆண்டவரிடம் கேட்கும்போது அவர் நமக்குப் பதில் தருகிறவராயிருக்கிறார்.

பரிசுத்தம்

கிறிஸ்தவ வாழ்க்கையில் ஜெபம் மட்டும் அல்ல, பரிசுத்தமும், அதிமுக்கியமாக கைக்கொள்ள வேண்டும். பரிசுத்தத்தைப்பற்றி வேதம் நமக்கு இப்படியாகப் போதிக்கிறது. " யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே." (எபிரெயர் 12 :14) இன்னும் "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். என்று மத்தேயு 5:18 ல் கூறப்பட்டுள்ளது ஆகவே பரிசுத்தமில்லாமல் நாங்கள் ஜெபங்களை ஏறெடுத்தால் அதற்கு ஆண்டவர் பதில் தரமாட்டார். துன்மார்க்கரின் ஜெபம்கர்த்தருக்கு அருவருப்பானது.

ஆண்டவர் ராஜாதி ராஜாவும், கார்த்தாதி கர்த்தரும், சர்வவல்லமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுசரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக் கூடாதவருமாய் இருக்கிறார். தேவப் பிள்ளைகளே அப்படிப்பட்ட தேவனுடைய சமூகத்தில் என்றென்றும் நிலைத்திருக்க அழைக்கப்பட்ட நீ எவ்வளவு பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். உங்களுடைய வெளித் தோற்றத்தினால் எப்படி பரிசுத்தமாய் ஜீவிக்கிறீர்களோ! அதைவிட உங்கள் உள்ளத்திலும் பரிசுத்தமாய் வாழவேண்டியது அவசியம்.

இந்த உலகத்தில் தேவ பக்தியோடும், உண்மையோடும், பரிசுத்தத்தோடும் வாழ்வது மிகவும் கஸ்டமானது. ஜீவனுக்குப் போகும் வாசல்ஒடுக்கமானது. கேட்டுக்குப் போகும் வாசல் விரிவானது. ஆனாலும் இயேசுக்கிறிஸ்து எங்களுக்குள் வாசம் பண்ணினால் இந்த வாழ்க்கை சுலபமானது. லேசானது. ஊசிமுனைக் காதுக்குள் ஒட்டகங்கள் போனாலும் பரலோக ராஜ்யத்துக்குள் பரிசுத்தம் இல்லாமல் யாரும் போகமுடியாது. அதுமட்டுமல்ல வேதத்திலே பார்க்கிறோம். " உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளிளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்... (1பேதுரு 1:15,16) நாம் ஏன் பரிசுத்தமாய் ஜீவிக்க வோண்டும்? ஏனென்றால் நம்முடைய தேவன் பரிசுத்தமுள்ள தேவன்! அவருடைய குணாதிசயத்தில் முக்கியமானது அவருடைய பரிசுத்தமாகும்! பரலோகம் முழுவதும்

அவருடைய பரிசுத்தத்தால் நிரம்பியிருக்கிறது. நாமும் பரிசுத்தத்தில் முன்னேறிச்செல்ல வேண்டும் என்று நம்முடைய தேவன் வாஞ்சிக்கிறார். அப்போஸ்தலனாகிய யோவானை கர்த்தராகிய இயேசு ஆவிக்குள்ளாக்கி பரலோக ராஜ்யத்துக்கு கொண்டு சென்று அங்கே உள்ள காட்சிகளைக் காண்பிக்க சித்தமானார். அங்கே அவர்கள் கண்டது என்ன? வான சேனைகள் எல்லாம் கர்த்தரைப் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன. "அவைகள்: இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன." (வெளி 4:8)

அதனால் தான் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபை மக்களுக்கு எழுதும் போது இப்படியாக எழுதுகிறார் "இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாமிசத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம். (2 கொரிந்தியர் 17) பவுல் மிகுந்த அன்போடு சொல்லுகிறார், பரிசுத்தமாகுதலை தேவ பயத்தேடே பூரணமாக்கக் கடவோம் என்று. பரிசுத்தமாகுதலில் ஒரு பூரணம் உண்டு. அந்த பூரணத்தை நோக்கி கடந்து செல்கிறோம். ஒரு வீட்டுக்குள் மிதந்துகொண்டிருக்கும் தூசிகளை சாதாரணமாக காணமுடியாது. ஆனால் சூரிய வெளிச்சம் துவாரத்தின் வழியாக வீட்டுக்குள்ளே பிரவேசிக்கும்போது அந்த வெளிச்சத்தின் மத்தியிலே அந்த தூசிகளைப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது அதுபோலவே நாமும் தேவ சமூகத்தில் போகும் போது பரிசுத்தாவி என்னும் வெளிச்சம் நம்மேல் படும்போது, நமக்குள் இருக்கிற அசுசிகளைக் கண்டுகொள்ள முடியும். உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள். உங்கள் ஆவியில் வந்த அசுசி என்ன. பொய்யா? களவா? பெருமையா? மேட்டிமையா? எதுவானாலும் தேவனுக்கு முன்பாக உன்னை ஒப்புக்கொடு. "உங்களைப் பரிசுத்தம்பண்ணிக் கொள்ளுங்கள். நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார். (யோசுவா 3:5)

பூரண பரிசுத்தம்

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து தன்னுடைய பிள்ளைகளுக்குச் சொல்கிறார். தீமையேடு எதிர்த்து நிற்கவேண்டாம். ஒருவன உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ. உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகம் கோணாதே. உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்து கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள். அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷிசித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண

சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள். (மத்தேயு 5:39-48) கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஒரு நோக்கம் உண்டு. நாம் தேவனைப்போல பூரண சற்குணமுடையவர்களாய் ஜீவிக்க வேண்டும் என்பதே அந்த நோக்கம். பூரணம் என்ற வார்த்தைக்கு முழுமை என்று அர்த்தம். நம்மைப் பூரணப்படுத்தும்படி ஆண்டவராகிய இயேசு இரத்தம் சிந்தினார். வேத வசனங்களைத் தந்தார். ஜெப ஆவியை ஊற்றினார். பரிசுத்த ஆவிக்குள் வழி நடத்திச் செல்கிறார். தேவ பிள்ளையே, பூரணமாகும்படி நீ முயற்சி செய்கிறாயா? வேதம் சொல்கிறது அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், "அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்." (1யோவான் 3:3) "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று யோவான் 14:6ல் சொல்லப்பட்டது போல ஆண்டவர் காட்டிய பாதையில் நாமும் நடப்போம். ஆண்டவராகிய இயேசு தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

ஆமென்

உங்கள் பிரச்சனைகளுக்கு, துன்பங்களுக்கு, கண்ணீருக்கு விடுதலைதரும் இயேசு

சகோதரி நகோமி லோகன்

அன்பான தேவனுடை பிள்ளைகளே! கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினால் அன்பின் நல்வாழ்த்துக்கள்.

"பெரிய பர்வதமே நீ எம்மாத்திரம், செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்" (சகரியா 4:7) அருமையான தேவ பிள்ளைகளே! உங்கள் பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும், நீங்கள் சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாலும், அது உங்களுக்கு பெரிய பர்வதம்போல உங்களுக்கு முன்பாக இருந்தாலும், இந்த நாளிலே கர்த்தராகிள இயேசுக் கிறிஸ்து கூறுகிறார். "பெரிய பர்வதமே நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்." என்று

வேதத்திலே வாசிக்கும் போதெல்லாம் ஒருவர்கூட இயேசுவிடம் வந்து, தங்கள் பிரச்சனைகளில் இருந்து விடுதலை பெறாமல் செல்லவில்லை. "இயேசு நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்கிறவராயும் சுற்றித்திரிந்தார்."(அப்போ 10:38) அன்பான தேவபிள்ளைகளே! ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து உங்களுக்கு நன்மை செய்கிறவராயும், ஆசீர்வதிக்கிறவராயும் இருக்கிறார். என்னிடத்தில் வருகிறவனை புறம்பே தள்ளுவதில்லை என்று வாக்களித்த தேவன், யார் யார் எல்லாம் இயேசுவிடம் வருகிறார்களோ! அவர்களை இயேசு விடுவிக்கிறார். இயேசு பட்ச பாதமுள்ள தேவன் அல்ல.

இயேசு இந்தப் பூமியில் இருந்த போது, சுற்றுப் பட்டணங்களிலுள்ள ஜனங்களையும், பிணியாளிகளையும், அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும், எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள். அவர்கள் எல்லோரும் இயேசுவால் குணமாக்கப் பட்டார்கள். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்." ஆம் நீங்கள் யாராக இருந்தாலும், என்ன நிலமையில் இருந்தாலும், என்ன பிரச்சனையில் இருந்தாலும், நீங்கள் இயேசுவை விசுவாசிக்கும் போது அவர் உங்களை விடுதலை யாக்குகிறார்.

வேதத்திலே மார்த்தாள், மரியாள், லாசரு என்கின்ற சகோதரன், சகோதரிகள் இருந்தார்கள். இவர்கள் இயேசுவிடத்தில் அன்பாக இருந்தார்கள். அவர்களில் லாசரு என்கிற சகோதரன் திடீரென்று வியாதிப்பட்டு மரித்துவிட்டான். லாசருவைக் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டு நான்கு நாட்களுக்கு பின்பு இயேசு அந்த இடத்துக்கு வருகிறார். அப்பொழுது, இயேசுவைக்கண்ட மார்த்தாளும், மரியாளும் தங்கள் ஒரே நம்பிக்கையாக இருந்த சகோதரன் மரித்துவிட்டான். இனி யார் எங்களைக் கவனிப்பது. திக்கற்றவர்களாகப் போனோமே என்று கலங்கி கண்ணீர் விட்டார்கள். அப்பொழுது இயேசுவும் அவர்களுக்காக கண்ணீர் விட்டார் என்று வேதம் சொல்லுகிறது. அந்த வேளையிலும் ஆண்டவர் அவர்களைத் திடப்படுத்துகிறார். பின்பு இயேசு அவர்களை நோக்கி. "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உங்களுக்குச் சொல்ல வில்லையா? என்றார். அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப் போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து. பிதாவே நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கின்றேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன். ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்து

நிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார். இவைகளைச் சொன்னபின்பு, லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுதுமரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகம் சீலையால் சுற்றப்பட்டிருந்தது.இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள் என்றார்." (யோவான் 11: 40-44) ஆண்டவர் உயிரோடு எழுப்பிய லாசருவை, மார்த்தாளிடமும், மரியாளிடமும் ஒப்படைத்தார்.

இயேசுக் கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். ஆம் அன்பானவர்களே! அவர் ஒருபோதும் மாறிடாதவர். நமது ஆலயத்துக்கு வந்து கொண்டிருக்கும் ஒரு சகோதரியின் மகள் கணவன், இரண்டு பிள்ளைகள் குடும்பமாக, சில மாதங்களுக்கு முன்பாக கனடாதேசத்திலிருந்து, இலங்கைக்கு (சாவகச்சேரி)க்குச் சென்றிருந்தார்கள். கொஞ்ச நாட்களுக்குப் பின்னர் தேசத்திலே இன்னும் அதிகமான பிரச்சனை தொடங்கிவிட்டது. அந்தப் பிரச்சனையில் இவர்கள் அகப்பட்டுக் கொண்டார்கள். இங்கே நமது சபையில் சகோதரி (தாய்) அந்த மகளுக்காக சபையாருடன் சேர்ந்து ஜெபித்தார்கள். கர்த்தர் தாமே பாதுகாத்து அற்புதமாக கனடா கொண்டுவந்து சேர்த்தார்.

ஆம் தேவனுடைய பிள்ளைகளே! அந்தக் குடும்பத்துக்கு அற்புதம் செய்த ஆண்டவராகிய இயேசு உங்களுக்கும் அற்புதம் செய்ய வல்லவராக இருக்கிறார். இயேசு பட்சபாதமுள்ள தேவன் அல்ல. இன்றைக்கும் உயிரோடு இருக்கும் ஆண்டவர். அன்பான சகோதரனே, சகோதரியே! மூன்று மாதங்களுக்கு முன்பாக நான் வேலை செய்து கொண்டு இருந்த போது, ஆண்டவரின் பிரசன்னம் மூடுவதை உணர்ந்தேன். அதற்கு முன்பும் அடிக்கடி ஏற்படுவதுண்டு. நான் அதிகமாக அதுபற்றி அலட்டிக் கொள்வதில்லை. அந்த வேளையில் எனக்கு ஒரு எண்ணம் தோன்றியது. எனக்கு அதிக நாட்களாக இடது காலில் வலி இருந்து கொண்டிருந்தது. அந்த வேளையிலும் வலியினால் வேதனைப்பட்டேன். நான் ஆண்டவரிடம் கேட்டேன். ஆண்டவரே இந்தப் பிரசன்னம் உம்முடையதாக இருந்தால், இந்த வலி இப்போதே நிற்க வேண்டும் என்று விண்ணப்பித்தேன். உடனே அந்த வலி நின்றுவிட்டது. அதன் பிறகும் எனக்கு ஒரு சம்பவம் நேரிட்டது. அப்பொழுதும் கர்த்தரின் சுகமாக்கும் அனுபவத்தை உணர்ந்தேன். இப்பொழுதெல்லாம் கர்த்தரின் பிரசன்னம் எனக்கு வரும்போதெல்லாம் கர்த்தரை அதிகமாகத் துதிக்கின்றேன். "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?
(2 கொரிந்தியர் 3: 16)

முன்பு எல்லாம் ஆண்டவராகிய இயேசுவை அறியாத காலத்திலே, தெய்வத்தை எங்கு காணலாம்? அவரை எங்கு சந்திக்கலாம் என்று ஆர்வமாக இருந்தேன். ஆனால் அந்த வாஞ்சையை எனது பாரம்பரியமோ, எனது சடங்காச்சாரமோ சொல்லித்தரவில்லை. இயேசுவை அறிந்த மாத்திரத்திலே, இந்த வேதத்தை வாசிக்கும் பொழுது, அவரைத் துதிக்கும் பொழுது, அவருடைய அன்பின்கனிவு என் இருதயத்திலே கசிவதை உணர்ந்து கொள்கிறேன். மரித்தேன் இதோ, சதா காலங்களிலும் உயிரோடு இருக்கிறேன் என்ற ஆண்டவராகிய இயேசுவை நீங்களும் அறிந்து கொள்ளலாம். "ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான். தேடுகிறவன் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். (லூக்கா 11:10) கடையிலே ஒரு பொருள் விற்கப்படுகிறது. அதை வாங்கிப்பாவிக்காமல் அதனுடைய பயனைச் சொல்ல முடியாது. அதுபோலவே தான் நீங்களும் இயேசுவை கிறிஸ்தவர்களுடைய தெய்வமாக ஒருவேளை நினைக்கலாம். இயேசு வெள்ளைக்காரருடைய தெய்வம் என்று கூறி இயேசுவிடம் வராமல் இருக்கலாம். ஆனால் உண்மை

அப்படி அல்ல. இயேசுவே ஆண்டவர். இயேசுவும் ஒரு தெய்வம் அல்ல இயேசுவே ஆண்டவர். அவர் வானத்தையும் பூமியையும் படைத்த ஆண்டவர். எங்களையும், உங்களையும் படைத்தவர். இயற்கையைப் படைத்தவர். இதனால் தான் வேதம் சொல்லுகிறது "தேடுங்கள் கண்டடைவீர்கள்" என்று. "ஏனென்றால் கேட்கிற எவனும் பெற்றுக்கொள்கிறான். தேடுகிறவன் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்தமனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக்கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாமபைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குநல்ல ஈவுகளைக் கொடுகக அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர் களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? (மத்தேயு 7:9-11)

இதை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பான சகோதரனே, சகோதரியே உங்கள இருதயங்களில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யட்டும். தேவனுடைய அன்பை, அவர் உங்களுக்கு சொல்லித்தரட்டும். தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள விடாமல் சத்துருவானவன் பரிசுத்த ஆலயத்துக்கு வரவிடாமல் தடைபண்ணுவான். சத்துருவானவன் தடையை உறவினர்கள் மூலமோ, நண்பர்கள் மூலமோ, அல்லது வேலைகள் மூலமோ, அல்லது பண ஆசையைக் கொடுத்தோ எந்த விதத்திலோ உங்களைத் தடுப்பான எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து விட்டு, தேவனுடைய பரிசுத்த ஆலயத்துக்கு வாருங்கள. உங்களுக்கு இருக்கும் எந்தப் பிரசசனையாக இருந்தாலும், யாராலும் தீர்க்க முடியாத கஸ்டமாகவோ, தோல்வியாகவோ, கடன் பிரச்சனையாகவோ, அல்லது இமிக்கிரேசன் பிரச்சனையோ, வியாதியோ எதுவாக இருந்தாலும் இயேசு உங்களுக்கு விடுதலை தருவார் "அவர் சொல்ல ஆகும் இயேசு கட்டளையிட நிற்கும்" இயேசுவால் முடியாத காரியங்கள் ஒன்றுமில்லை. தயவு செய்து வேதப்புத்தகத்தை வாங்கிப் படியுங்கள். அதன் படி நடவுங்கள். தேவனுடைய பிள்ளைகளோடு தொடர்புகொள்ளுங்கள். ஜெபியுங்கள், துதியுங்கள் இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார். விடுதலை தருவார். ஆறுதல் படுத்துவார்.

இயேசு தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

ஆமென்

சாட்சிகள்

காணாமல் போன தம்பி

(1)

என் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்த்துவுக்கு மகிமை உண்டாவதாக. இந்தியாவிலே இருக்கும் என் தம்பி காணாமல் போய் விட்டான். என்னுடைய உறவினர்கள் பத்துநாட்களாய்த் தேடியும் கண்டுபிடிக்கமுடியவில்லை. நானும் வேதனையோடு இருந்தேன். அதன் பின்பு நான் போகும் ஆலயமாகிய சத்தியவேத திருச்சபையின் ஜெபக்கூட்டங்களில் கலந்துகொண்டு என் தம்பிக்காக நானும் சபையார் அனைவரும் சேர்ந்து ஊக்கத்தோடு ஜெபித்தோம். ஆண்டவர் எங்கள் ஜெபத்தைக் கேட்டு அற்புதவிதமாக என்தம்பியை மீட்டுத்தந்தார். என்தம்பிக்கு எந்த ஒரு குறையும் இல்லாமல் பாதுகாத்த என் தேவனுக்கு கோடானுகோடி நன்றிகளை செலுத்துகிறேன்.

அன்பின் சகோதரி சுஜாதா

(2) **Sponcer கிடைத்தது**

ஆண்டவருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. எனக்கு கணவராக வரப்போகும் ஜெயாவுக்கு Sponcer செய்வதற்கான முயற்சி செய்தேன். அந்த வேளையிலே பல பிரச்சனைகள் உருவாகியது அதன் பின்பும் Sponcer செய்துவிட்டு விசாவுக்காக காத்திருந்தோம். அந்த வேளையிலும் பல பிரச்சனைகள் ஏற்பட்டது. நான் என்ன செய்வது என்று அறியாமல் இருந்தேன். ஜெயாவினுடைய Medical விழுவ பிரச்சனை. ஆகவே நான் என் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவை இறுகப் பற்றிக்கொண்டேன் நான் சென்று வந்த சத்தியவேத திருச்சபையிலே விண்ணப்பம் பண்ணியும் ஜெபக்கூட்டங்களில் பங்கு கொண்டேன். தொடர்ந்து சபையார் எல்லோரும் எனக்காக ஊக்கத்தோடு ஜெபித்தார்கள். எங்களுடைய ஜெபத்தைக்கேட்ட என் ஆண்டவர் கடந்த மாதத்திலே நல்ல பதில் தந்தார். ஜெயாவினுடைய Medical எல்லாம் நல்லபடியாகவும் நடந்தது. Visa வும் கிடைத்துவிட்டது எல்லாப் பிரச்சனை வேளையிலும் என் கூப்பிடுதலைக் கேட்டு என் கண்ணீரைத் துடைத்த அருமை ஆண்டவருக்கு கோடி ஸ்தோத்திரங்கள்.

அன்பின சகோதரி டொலர் றோசா

(3) **ஆபத்தில் இருந்து விடுதலை செய்த இயேசு**

எனது மகள் தனது இரண்டு பிள்ளைகளுடனும் கணவருடனும் கனடாவில் இருந்து இலங்கைக்குச் சென்றிருந்தாள். பின்பு கொழும்பில் இருந்து சாவகச்சேரி சென்றிருந்தபோது அங்கே யுத்தம் ஆரம்பித்துவிட்டது. அது மட்டுமல்ல எனது மகள் கர்ப்பிணியாகவும் இருந்தாள். நான் மிகவும் கலங்கினேன். ஆண்டவராகிய இயேசுவையே இறுகப்பற்றினேன். திருச்சபையில் நடந்த உபவாச ஜெபத்திலும், ஞாயிறு ஆராதனையிலும் தவறாமல் கலந்து கொண்டேன். ஆண்டவராகிய இயேசு என் அழுகையின் சத்தத்தைக் கேட்டு எனது மகளை அற்புதமாகப் பாதுகாத்து Canada வர உதவி செய்தார். இம்மட்டும் பாதுகாத்த என் ஆண்டவராகிய இயேசுவுக்கு துதிகன மகிமையை செலுத்துகிறேன்.

சகோதரி அன்னாள் டேவிட்

(4) **சுகம் தந்த இயேசு**

எனது பேத்தி சுகவீனமாக இருந்தாள். நான் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவை முழுமனதோடு விசுவாசிக்கிறேன். நான் இயேசுவை விசுவாசித்து ஜெபித்தேன். என் ஜெபத்தைக் கேட்ட ஆண்டவர். என் பேத்திக்கு மூன்று நிமிடங்களிலே அவளுக்குச் சுகம் கொடுத்தார். இன்னும் எவ்வளவோ காரியங்களையும் செய்து வருகிறார். நான் பல வருடங்களுக்கு முன்பாக கண்ணீரோடும், வேதனையோடும், இந்த திருச்சபைக்கு வந்தேன். அன்று தொட்டு இன்றுவரையிலும் என் தேவன் கைவிடாமல் என் கவலைகள், கண்ணீரைத் துடைத்து காத்துவருக்றார். அவருக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.

அன்பின் சகோதரி மேரி கனகம் அம்மா

(5) கேழுங்கள் கொடுக்கப்படும்

எனது மகனுக்கு பல மாதங்களாக வேலை கிடைக்கவில்லை இதனால் எனது மகனின் தேவையை சத்தியவேத திருச்சபையின் ஜெப ஊழியத்தில் ஜெபிக்கும்படி தெரிவித்தேன். திருச்சபையார் என் மகனுடைய வேலைக்காக ஊக்கத்துடன் ஜெபித்தார்கள். ஜெபத்தைக்கேட்ட ஆண்டவர், எனதுமகனுக்கு ஒரே நேரத்தில் மூன்று வேலையைக் கொடுத்தார். ஆண்டவாராகிய இயேசுக்கிறிஸ்து நாங்கள் கேட்கிறதற்கும் மேலாக என் மகனை ஆசீர்வதிக்கிறபடியால் நன்றியோடு அவரைத் துதிக்கிறேன்.

அன்பின் சகோதரி ருபீனா அப்பத்துரை

(6) நல்வழியைக் காண்பித்த இயேசு

என் ஆண்டவராகிய இயேசுவுக்கு மகிமை உண்டாவதாக நான் ஒரு வருடத்துக்கு முன்பு பல பிரச்சனைகளோடு சத்தியவேத திருச்சபைக்குச் சென்றேன் அங்கு சென்று ஆண்டவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானமும் பெற்றுக்கொண்டேன். அன்றிலிருந்து இன்றுவரை என் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து என்னையும் என் குடும்பத்தையும்காப்பாற்றி வருகிறார். இருந்த எல்லாப் பிரச்சனையிலிருந்தும் விடுதலையும் தந்தார் அதுமட்டுமல்ல கடந்த மாதம் என்னுடைய மகள் சங்கவிக்கு வயிற்றில் ஏற்பட்ட வலியால். தாங்க முடியாமல அழுதுகொண்டே இருந்தாள். அடுத்த நாள் புதன் கிழமை Lansdowne தமிழ்க் கோப் மூன்றாவது மாடியில் நடந்த ஜெபக்கூட்டத்தில் சபையார் எல்லோருமாகச் சேர்ந்து ஜெபித்தோம். எங்கள் ஜெபத்தைக் கேட்ட ஆண்டவர். என் மகளுக்கு உடனே சுகம் கொடுத்து. இம்மட்டுமாகக் காத்து வருகிற என் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். அதுமட்டுமல்ல இவ்வளவுகாலமும் என் கணவர் வேலை செய்து வந்தார். ஆனாலும் வருமானம் நம்முடைய செலவுக்குப் போதாமையாக இருந்தது. அதனால் நான் Welfare கும் எடுத்தோம். வேலையும் செய்து கொண்டு Welfare கும் எடுக்கும் போது ஏதோ ஒரு குற்ற உணர்வு அடைந்தேன். முன்பு ஒரு காலத்திலே எடுத்தேன் ஆனால் அது குற்றமாகத் தெரியவில்லை. இப்போ ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டபின்பு சின்ன ஒருதவறையும் செய்ய முடியவில்லை. அதுமட்டுமல்ல நான் வசித்து வந்தது Subsidy யில். அதனால் என் கணவர் செய்யும் வேலையைக்கூட முழுமையாக காண்பிக்கமுடியாமல் இருந்தேன். இயேசுவை ஏற்றுக்கொண்ட பின்பு. ஆண்டவரிடம் நான் மன்றாடினேன். ஆண்டவரே எங்களை இப்படிப்பட்ட பிரச்சனையில் இருந்து விடுவியும். நான் உம்முடைய பிள்ளையாக. பொய் களவு செய்யாத பிள்ளையாக வாழவேண்டும் என்று கேட்டேன். வேதம் கூறுகிறது "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனே இரக்கம் பெறுவான்." என்று (நீதி 28 : 13) சொல்லப்பட்டுள்ளது. அதன்படி நடக்கவேண்டும் என்று நான் ஆண்டவரிடம்கேட்டேன். எனக்கு ஒரு புது வழியையும் ஒரு ஆசீர்வாதத்தையும் தாரும் என்று கேட்டேன். என் தேவன் என் ஜெபத்துக்குச் செவிசாய்த்து, என் கணவருடைய வேலையை ஆசீர்வதித்து நல்ல சம்பள உயர்வையும் கொடுக்கச் செய்தார். நான் உடனே Welfare ருக்கு ரெலிபோன் செய்தேன் இனி எனக்கு Welfare வேண்டாம் என்று கூறினேன். நான் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவை நம்பினேன். அவர் என்னைக் கைவிடாமல் ஆசீர்வதித்து. என்னுடைய குடும்பத்தினுடைய

தேவைகளையும் வேறு தேவைகளையும் சந்தித்து வருகிறார். கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார். நான் தாழ்ச்சியடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார். நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர். உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்."

(சங் 23 : 1-4)

இந்த வசனத்தின் படி ஆசீர்வதிக்கிற என் தேவனுக்கு துதிகன மகிமையை அவருக்கே செலுத்துகிறேன்.

சகோதரி திரேசா சுமதி சிவலிங்கம்

(7) சிகரெட் புகைப்பதிலிருந்து விடுதலை

ஆண்டவருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. சங் 24: 4,5ல் சொல்லப்பட்டதுபோல், " கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும் கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே, அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும், தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான்." இந்த வார்த்தையின் படி வாழவேண்டும் என்று விரும்பினேன். ஆனாலும் நான் வேலை செய்கிற இடத்தில் பல பிரச்சனைகள் இருந்தது. வேலை செய்யும்போது சிகரெட் வாங்கிவரச் சொல்லுவார்கள். இதனால் வேதனைப்பட்ட நான், ஆண்டவரிடம் முறையிட்டேன். ஆண்டவரே எனக்கிருக்கும் இந்தப் பிரச்சனையிலிருந்து விடுதலை தாரும். இப்படிப்பட்ட காரியத்தை என்னால் செய்ய முடியவில்லை என்று ஜெபித்தேன். பின்பு அந்தப் பெண்ணிடமும் கூறினேன். சிகரெட் புகைப்பது சரீரத்துக்குக் கூடாது. அதுமட்டுமல்ல, நான் உங்களுக்கு சிகரெட் வாங்கித்தரும்போது உங்களுடைய இந்த தீயபழக்கத்துக்கு நானும் உடந்தையாக இருக்கிறேன். ஆனபடியால் நான் இனிமேல் உங்களுக்கு சிகரெட் வாங்கித்தரமாட்டேன் என்று சொன்னேன். ஆண்டவருடைய பெரிதான அற்புதம் அந்தப் பெண் அன்றிலிருந்து சிகரெட் குடிக்கும் பழக்கத்தை விட்டுவிட்டாள். ஆண்டவருக்கே துதிகனமகிமையைச் செலுத்துகிறேன்.

அன்பின் சகோதரி டொலர் ரோசா

(8) வயிற்றுவலி மாறியது

என்னுடைய வயிற்றில் வலி இருந்தது. தாங்கமுடியாத நிலமையில் சத்தியவேத திருச்சபையுடன் ஜெபத்துக்காகத் தொடர்பு கொண்டேன். அவர்கள் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். ஜெபத்தைக் கேட்ட ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து, உடனே பதில் தந்து என்னைக் குணமாக்கினார். வைத்தியரிடம் போகாமலே, எனக்கு சுகம்தந்த என் இயேசுவுக்கு கோடான கோடி ஸ்தோத்திரங்கள்.

சகோதரி வசந்தா L

(9) தொலைந்து போன வோலட்

என் தேவனாகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினால், எதைக் கேட்டாலும் தா வல்லவரும், நாம் வேண்டிக் கொள்வதற்கும், நினைக்கிறதற்கும், மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிருபை செய்கிற, நம்முடைய ஆண்டவராகிய இயேசுவுக்கு மகிமை உண்டாவதாக. சென்ற கிழமை எனது வோலட் ஒரு சிறு தொகைப் பணமும், மற்றும் சில முக்கியமான பொருட்களுடனும் தவறிவிட்டது. அன்று நான் பல இடங்களுக்குச் சென்றபின், Street Car இல் பிரயாணம் செய்து கொண்டு இருக்கும் பொழுது வோலட் தவறியது தெரியவந்தது. அது எனது கையில் உடனே கிடைக்கவேண்டும் என்று இயேசப்பாவை நோக்கி விண்ணப்பம் பண்ணி ஜெபித்துக் கொண்டு, நான் ஏறிய Subway க்கு சென்று பார்த்த பொழுது பல பிரயாணிகள் மத்தியில் வோலட் இருந்தது. அவர்கள் மத்தியில் இருந்த போதிலும், அதற்குள் இருந்த பொருளோ! பணமோ! ஒன்றும் தொலைந்து போகாமல் மீட்டுத் தந்த என் ஆண்டவருடைய நாமத்தை உயர்த்தி என்னைத் தாழ்த்துகிறேன்

நிஷான் 12 வயது

9வது ஆண்டு நிறைவு விழா

சத்தியவேத திருச்சபை, ஜெப ஊழியத்தின்

9வது ஆண்டு நிறைவு விழா

காலம்	இடம்
01.07.2000	**1140 Bloor St. West**
சனிக்கிழமை	**Dufferin & Bloor**
மாலை 6.30 மணிக்கு	**(Dufferin Subwey)**

உங்கள் ஒவ்வொருவரையும் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில், சத்தியவேத திருச்சபை சார்பாக அன்புடன் அழைக்கின்றோம்.



பரிசுத்த ஆவியின் அபிஷேகம்

" பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முளுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள். என்றார்." (அப்போஸ்தலர் 1:8)

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்றால் என்ன?

இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுள்ளவர்களுக்கு இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணியுள்ள சிறப்பான அனுபவமே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்றழைக்கப்படுகிறது. இந்த அனுபவம் பல்வேறு வார்த்தைகளில் விளக்கப்பட்டு உள்து.

1. பரிசுத்தாவியின் ஞானஸ்நானம்

விசுவாசி ஒருவருக்கு போதகர் தண்ணீரில் இறக்கி ஞானஸ்நானம் கொடுப்பது போல இயேசுகிறிஸ்து விசுவாசிகளுக்கு பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் கொடுக்கிறார். யோவான ஸ்நானனும், இயேசுவும் இந்த அனுபவத்தை பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்று அழைக்கின்றார். (மத்தேயு 3: 11.) (யோவான் 1: 33.) (அப்போஸ்தலர் 1 :4)

2. <u>பரிசுத்த ஆவியின் அபிஷேகம்</u>

அபிஷேகம் என்ற வார்த்தை எண்ணை பூசுதல் என்ற பொருளில் பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒருவரை ஒரு சிறப்பான பணிக்கு நியமிக்கும் போது அதிகார பூர்வமாக அங்கீகரித்ததற்கு அடையாளமாக எண்ணை பூசப்பட்டது. அல்லது எண்ணை தலையில் ஊற்றப்பட்டது.

- ஆசாரியர்கள் அபிஷேகிக்கப்பட்டனர். (யாத்தி. 28: 41.)
- ராஜாக்கள் அபிஷேகிக்கப்பட்டனர். (1 சாமுவேல். 16: 13.)
- தீர்க்கதரிசிகள் அபிஷேகிக்கப்பட்டனர். (1 ராஜா. 19: 16.)

இந்த எண்ணெய் அபிஷேகம் புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின நிறைவுக்கு உவமிடப்பட்டுள்ளது.

இயேசு பரிசுத்தாவியினாலும், வல்லமையினாலும அபிஷேகிக்கப்பட்டார். (அப்போ 10: 38.) நீங்கள (விசுவாசிகள்)அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில நிலைத்திருக்கிறது. அந்த அபிஷேகம சகலத்தையும குறித்து உங்களுக்குப் போதிக்கிறது. (1 யோவான் 2: 27.)

இந்த அனுபவத்தை விளக்கும் மற்ற வார்த்தைகள்:

3. பரிசுத்த ஆவியினாலே நிரப்பப் பட்ல (அப்போ. 2: 4.)
4. ஆவி பொழிந்தருளப்பட ல். (அப்போ. 2: 33. 46.)
5. ஆவியை ஊற்றுதல். (அப்போ. 2: 17.) (யோவேல். 2: 28,29.)
6. பரிசுத்த ஆவியானவர் இறங்குதல். (அப்போ. 10: 44.)
7. பரிசுத்த ஆவியைப் பெறுதல். (அப்போ. 2: 47 8:17.)
8. பரிசுத்த ஆவியானவர் மற்றவர்கள் மேல் இறங்குதல். (அப்போ. 19: 6.)
9. உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும். (யோவான் 4: 38,39.)
10. ஒருவனுக்குள் நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்று. (யோவான் 4: 14.)

தேவ ஆவியினால் நிரப்பப்படும் அனுபவம் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டில் தேவ ஆவியினால் நிரப்பப்படல்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் குறிப்பிட்ட வேலைகளைச் செய்ய சில குறிப்பிட்ட தேவ மனிதர்கள் மேல் தேவ ஆவியானவர் இறங்கினார்.

உதாரணங்கள்.

1. யோசேப்பு தேவன் அருளும சொப்பனங்களை காணவும் அதன் கருத்தை விளக்கவும் தேவ ஆவியினால நிரப்பப்பட்டிருந்தார் "தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல வேறொருவன் உண்டோ." (ஆதி. 41: 38.)

2. பெசலெயேல் - அகோலியாப்

ஆசாரிப்புக் கூடார வேலையில் நுட்பமான வேலைகளைச் செய்ய இவர்கள் தேவ ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தனர் "விசித்திரமான வேலைகளை யோசித்துச் செய்யவும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலை செய்யவும், இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கவும், மரத்தில் சித்திர வேலை செய்து சகல விநோதமான வேலைகளைச் செய்யவும், அவனுக்கு ஞானத்தையும் புத்தியையும் அறிவையும் அருளி, அவன் சகலவித வேலைகளையும் செய்யும்படி தேவ ஆவியினாலே அவனை நிரப்பினார் அவன் இருதயத்திலும் தான் கோத்திரத்து அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாபின இருதயத்திலும், போதிக்கும் வரத்தையும் அருளினார். சித்திரவேலையையும் சிற்பவேலையையும், இளநீலநூலாலும் இரத்தாம்பர நூலாலும் சிவப்பு நூலாலும் மெல்லிய பஞ்சு நூலாலும செய்யப்படும் விசித்திரத் தையல வேலையையும் சகல விசித்திர நெசவு வேலைகளையுமவிநோதமான வேலைகளை யூகிக்கிறவர்களும் செய்கிறவர்களும் நிறைவேற்றும் சகலவித வேலைகளையும் செய்யும்படிக்கு அவர்களுக்கு இருதயத்தை ஞானத்தினால் நிரப்பினார். (யாத்தி 35: 31-35)

3. <u>மோசேயும் 70 மூப்பரும்</u>

இஸ்ரவேலை நியாயம் விசாரிக்க தேவ ஆவியினால் நிரப்பினார். "அப்பொழுது மோசேபுறப்பட்டு, கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்குச் சொல்லி, ஜனங்களின் மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி, கூடாரத்தைச் சுற்றிலும் அவர்களை நிறுத்தினான். கர்த்தர் மேகத்தில் இறங்கி, அவனோடே பேசி, அவன்மேலிருந்த ஆவியை மூப்பராகிய அந்த எழுபதுபேர்மேலும் வைத்தார். அந்த ஆவி அவர்கள்மேல் வந்து தங்கின மாத்திரத்தில் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்; சொல்லி, பின்பு ஓய்ந்தார்கள்." (எண்ணாகமம் 11. 24.25.)

4. யோசுவா மேல

தேவ ஆவியைப் பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா. " கர்த்தர் மோசேயை நோக்கி: ஆவியைப் பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்துகொண்டு, அவன் மேல் உன் கையை வைத்து. (எண்ணாகமம் 27: 18.)

யோசுவா ஞானத்தின் ஆவியினால் நிரப்பப்பட்டான். "மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின் மேல தன கைகளை வைத்தபடியினால அவன் ஞானத்தின் ஆவியினால் நிரப்பப்பட்டான். இஸ்ரவேல புத்திரா அவனுக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தா மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள். (உபாகமம் 34: 9.)

5. ஒத்னியேல் ஒத்னியேல் மேல் கர்த்தருடைய ஆவி வந்திருந்தார். " அவன் மேல் கர்த்தருடைய ஆவி வந்திருந்ததினால், அவன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்து, யுத்தம்பண்ணப் புறப்பட்டான். கர்த்தர் மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமை அவன் கையிலே ஒப்புக்

கொடுத்தார். ஆகையால் அவன் கை கூசான்ரிஷதாயீமின் மேல் பலன் கொண்டது. தேசம் நாற்பது வருஷம் அமைதலாயிருந்தது." (நியாயாதிபதிகள் 3: 10,11.)

6. கிதியோன் கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன் மேல் இறங்கினார். "மீதியானியரும் அமெலேக்கியரும் கிழக்கத்திப் புத்திரர் யாவரும் ஏகமாய்க் கூடி, ஆற்றைக் கடந்துவந்து யெஸ்ரயேல் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கினார்கள். அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன் மேல் இறங்கினார். அவன் எக்காளம் ஊதி, அபியேஸ்ரியரைக் கூப்பிட்டு தனக்குப் பின் செல்லும்படி செய்தான்." (நியாயாதிபதிகள் 6: 33,34.)

7 யெப்தா கர்த்தருடைய ஆவி யெப்தாவின் மேல் இறங்கினார். "அப்பொழுது கர்த்தருடைய ஆவி யெப்தாவின் மேல் இறங்கினார். அவன் கீலேயாத்தையும் மனாசே நாட்டையும் கடந்துபோய், கீலேயாத்திலிருக்கிற மிஸ்பாவுக்கு வந்து, அங்கேயிருந்து அம்மோன் புத்திரருக்கு விரோதமாகப் போனான்." (நியாயாதிபதிகள் 11: 29.)

8 சிம்சோன் கர்த்தருடைய ஆவி சிம்சோன் மேல் பலமாய் இறங்கினார். "அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால் அவன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும், அதை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழித்துப்போடுகிறது போல் கிழித்துப் போட்டான்." (நியாயா 14: 6.) "கர்த்தருடைய ஆவி அவன்மேல் இறங்கினதினால், அவன் அஸ்கலோனுக்குப் போய், அவ்வூராரில் முப்பது பேரைக் கொன்று, அவர்களுடைய வஸ்திரங்களை உரிந்துகொண்டுவந்து, விடுகதையை விடுவித்தவர்களுக்கு அந்த மாற்றுவஸ்திரங்களைக் கொடுத்து, கோபம் மூண்டவனாய்ப் புறப்பட்டு, தன் தகப்பன் வீட்டுக்குப் போய்விட்டான்." (நியாயா 14: 19.) "அவன் லேகிவரைக்கும் வந்து சேர்ந்தபோது, பெலிஸ்தர் அவனுக்கு விரோதமாய் ஆரவாரம் பண்ணினார்கள். அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன் மேல் பலமாய் இறங்கினதினால், அவன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூலைப்போலாகி, அவன் கட்டுகள் அவன் கைகளை விட்டு அறுந்து போயிற்று." (நியாயா 15: 14.)

9. சவுல் சவுலின் மேல் இறங்கிய ஆவியானவர். "அவர்கள் அந்த மலைக்கு வந்தபோது, இதோ, தீர்க்கதரிசிகளின் கூட்டம் அவனுக்கு எதிராக வந்தது. அப்பொழுது தேவனுடைய ஆவி அவன்மேல் இறங்கினதினால், அவனும் அவர்களுக்குள்ளே தீர்க்க தரிசனம் சொன்னான்." (1சாமுவேல் 10: 10)

10 தாவீது தாவீது மேல் இறங்கிய ஆவியானவர். "அப்பொழுது சாமுவேல் தைலக்கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம்பண்ணினான்; அந்நாள் முதற்கொண்டு கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்து இறங்கியிருந்தார்." (1சாமுவேல் 16:13)

11 அமாசாய் அமாசாயின் மேல் இறங்கிய ஆவியானவர். "அப்பொழுது அதிபதிகளுக்குத் தலைவனான அமாசாயின் மேல் ஆவி இறங்கினதினால், அவன்: தாவீதே, நாங்கள் உம்முடையவர்கள்; ஈசாயின் குமாரனே, உமது பட்சமாயிருப்போம்; உமக்குச் சமாதானம், சமாதானம்; உமக்கு உதவி செய்கிறவர்களுக்கும் சமாதானம்; உம்முடைய தேவன் உமக்குத் துணை நிற்கிறார் என்றான்." (1 நாளாகமம் 12: 18.)

12. எசேக்கியேல் எசேக்கியேல் மேல் இறங்கிய ஆவியானவர். "இப்படி அவர் என்னோடே பேசும் போது, ஆவி எனக்குள் வந்து, என்னைக் காலூன்றி நிற்கும்படி செய்தது; அப்பொழுது அவர் என்னுடனே பேசுகிறதைக் கேட்டேன்." (எசேக்கியேல் 2: 2.)

பழைய ஏற்பாட்டில் முன்னுரைக்கப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம்

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் குறிப்பிட்ட சிலர் மட்டுமே தேவனுடைய ஆவியினால் நிரப்பப் பட்டார்கள். கடைசிக் காலத்தில் எல்லாமனிதரும் இந்த அனுபவத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு உண்டாகும் என்று பழைய ஏற்பாட்டில் பல தீர்க்கதரிசிகள் மூலம் முன்னுரைக்கப்பட்டது. இதையே பிதாவின் வாக்குத்தத்தம் என்று இயேசு அழைத்தார். "ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். (அப்போ 1: 5)

"என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். (லூக்கா 34: 49)

"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்க தரிசனம் சொல்லுவார்கள். உங்கள் மூப்பர் சொற்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். (யோவேல 2. 28,29.)

மேலும், "பரியாச உதடுகளினாலும் அன்னிய பாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார். இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல். இதுவே ஆறுதல் என்று அவர்களோடே அவர் சொன்னாலும் கேட்கமாட்டோம் என்கிறார்கள். (ஏசாயா 28: 11,12.) தொடர்ந்தும் வேதத்திலே பார்க்கிறோம் " உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும். அப்பொழுது வனாந்தரம் செழிப்பன வயல்வெளியாகும். செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும்." (ஏசாயா 32: 15) இன்னும் ஆவியானவருடைய அபிஷேகத்தைக்குறித்துப் பார்க்கும் வேளையிலே, "தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின் மேல் ஆறுகளையும் ஊற்றுவேன். உன் சந்ததியின் மேல் என் ஆவியையும் உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர் வாதத்தையும் ஊற்றுவேன்." (ஏசாயா 44: 3.)

தொடர்ந்தும் நாம் வேதத்தைப் பார்க்கின்ற வேளையில், "நான் உங்களைப் புறஜதிகளிடத்திலிருந்து அழைத்து, உங்களைச் சகல தேசங்களிலுமிருந்து சேர்த்து, உங்கள் சுயதேசத்துக்கு உங்களைக் கொண்டு வருவேன். அப்பொழுது நான் உங்கள் மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன். நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன். நீங்கள் சுத்தயாவீர்கள். உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியைவைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன். உங்கள் பிதாக்களுக்கு நான் கொடுத்த தேசத்திலே நீங்கள் குடியிருப்பீர்கள். நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருந்து, உங்கள் அசுத்தங்களையெல்லாம் நீக்கி, உங்களை இரட்சித்து, உங்கள் மேல் பஞ்சத்தை கட்டளையிடாமல், கோதுமையை வரவழைத்து, அதைப் பெருகப் பண்ணி, நீங்கள் இனிமேல் ஜாதிகளுக்குள்ளே பஞ்சத்தினாலுண்டாகும் நிந்தையை அடையாதபடிக்கு, விருட்சத்தின் கனிகளையும் வயலின் பலன்களையும் பெருகப்பண்ணுவேன்." (எசேக்கியேல் 36: 24- 30)

(இதன் தொடர்ச்சி அடுத்த மாத லீலி, யில் தொடரும்)

சத்தியவேத திருச்சபையின் விசேட ஜெபக்கூட்டங்கள்

"என்னாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்"
(யோவான் 14:14)

புதன் கிழமைகளில் மாலை 7.00 மணிக்கு ஜெபக்கூட்டம்

20 Wade Ave
Lansdowne Tamil Co-Op Bulding
Lansdowne & Bloor (Lansdowne Subway)
மூன்றாவது மாடியில்

சனிக்கிழமைகளில் காலை 10.00 மணிக்கு உபவாசக் கூட்டம்

1140 Bloor St. West
Dufferin & Bloor (Dufferin Subwey)

சனிக்கிழமைகளில் மாலை 6.00 மணிக்கு ஜெபக்கூட்டம்

40 Oak St. (Gerrard & Parliament)

வியாழன் / வெள்ளிக்கிழமைகளில் வீட்டுக்கூட்டங்களும் நடைபெறும்.

வருத்தத்துடனும், பாரத்துடனும், வியாதியுடனும், பிரச்சனைகளுடனும் இருக்கும் உங்கள் ஒவ்வொருவரையும் இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் அன்புடன் அழைக்கிறோம். வாருங்கள் விடுதலை பெறுங்கள்.

தொடர்புகளுக்கு:
Tel: (416) 657- 8273
Fax: (416) 657- 8954
(416) 654- 4514

அனுதின மன்னா தேவ நற்செய்தி நிகழ்ச்சி.

பள்ளத்தாக்கின் லீலி, யைப் பெற்றுக்கொள்ளும் இடங்கள்.

லக்கி கொன்வெனியன்ஸ் ஸ்ரோர்ஸ்
1577 Lawrence Ave West (Toronto)
(416)246- 9383

கஜன் குறொசறி
1708 Jane St (North York)
(416)240- 0039

வசந்தா நகைமாளிகை
1230 Bloor St West (Toronto)
(416)536- 3956
(416) 536- 1225

நியூ ஸ்பைஸ் லாண்ட
5800 Sheppard Ave E.(Scarborough)
(416)292- 9769

மக்கள் கடை
300 Gerrard St East (Toronto)
(416)413- 1959

பூம்புகார் ஸ்ரோர்ஸ்
2190 Warden Ave (Scarborough)
(416)499- 8386

செறண்டிப் பிறஸ் மார்க்கட்
2631 Eglinton Ave E.(Scarborough)
(416)269- 9913

உதயாஸ் சுப்பர் மார்க்கட்
5010 Steeles Ave West #14,
(Etobicoke) (416)740- 7971

யாழ்ரன் மார்க்கட
Clint Wood Gate Unit # 4,5
(NOrth York) (416)445- 5352

சங்கர் அன் கம்பனி
2425 Eglinton Ave E.(Scarborough)
(416)759- 5100
(416)759- 4916

யோகாஸ்
615 Kennedy Rd (Scarborough)
(416)267- 0408

ஏசியன் சலூன்
560 Parliament St 2 nd Floor
(Toronto) (416) 924- 2477

லிபேட்டி சலூன்
1159 Victoria Park Ave
(Scarborough) (416)759- 1079

நியூ ராஜன் சலூன்
5010 Steeles Ave West #19,
(Etobicoke) (416)741- 1049

பிருந்தாவனம் றெஸ்ரோரன்ட்
400 Dundas St East
(Mississauga)(905)281- 3332

கொப்பக் கட் உணவகம்
880 Ellesmere Rd
(Scarborough) (416)299- 4311

எஸ் கே சுப்பர் மார்க்கட்
1230 King St West
(Toronto) (416)538- 7400

பாலா பிறதர்ஸ்
1320 Bloor St W.(Toronto)
(416)516- 0552
(416)532- 6809

கலைமகள் புத்தக நிலையம்
566 Parliament St.
(Toronto) (416)921- 5018

கலைமகள் புத்தக நிலையம்
3852 Finch Ave East. Unit # 10.
(Scarborough) (416)292- 9319

கலைமகள் புத்தக நிலையம்
3238 Eglinton Ave East.
(Scarborough) (416)265- 3605

கலைமகள் புத்தக நிலையம்
2580 Sheppard Ave. #32 B.
(Mississauga) (905)306- 0494

மெற்ரோ சுப்பர் மார்க்கட்
10 Mac Donell Ave.
(Toronto) (416)534- 1393

அம்பாள் ட்றேடிங் கம்பனி
583 Parliament ST
(Toronto) (416)928- 6665

வினாயகர் ஸ்ரொர்ஸ்
1316 King St. West
(Toronto)(416)531- 4065

யாழ்.ஸ் சுப்பர் ஸ்ரொர்ஸ்
607.A Parliament At
(Toronto) (416)923- 9806

ராதிகா கேட்டறிங்
587 Parliament St.
(Toronoto) (416)924- 2111

தூரிகா என்டர்ப்பிரைஸ்
240 Wellesly St. East. Unit # 5
(Toronto) (416)966- 1034

அம்மன் உணவகம்
2861 Jane St.
(North York,) (416)638- 9676

மீனாச்சி ரேக் அவுட் (உணவகம்)
3419 A Fieldgate Drive
(Mississauga) (905)238- 6114

ஆராதனாஸ் சில்க்ஸ் பலஸ்
2007 Fince Ave West
(North York) (416)740-7711

பாண்டியன் களஞ்சியம்
2176 Eglinton Ave West
(Toronto) (416)787-1995

துவாரகாஸ் ஸ்ரோர்ஸ்
1670 Victoria Park Ave
(North York) (416)757- 1091

நகரத்து விருந்து றெஸ்ரோரன்ட்
1656 Victoria Park Ave
(North York) (416)750- 0003

ஏ. வி . எம் வறையிரி ஸ்ரோர்ஸ்
1183 Vctoria Park Ave
(Scarborough) (416)285- 3347

றோயல் குறொசறி
653 Vctoria Park Ave
(Scarborough) (416)693-8078

றீகல் குறொசறி
1086 Victoria Park Ave
(Scarborough) (416)755- 6724

சீமாட்டி சில்க் கவுஸ்
1463 Gerrad St East
(Toronto) (416)463- 8129

கௌரி சில்க்
1461 Gerrad St East.
(Toronto) (416)465- 9830
(416)917- 6661

நீலம் சில்க்
1453 Gerrad St East.
(Toronto) (416)778- 7455

ஏ . கே . கோல்ட் கவுஸ்
1602 Gerrad St East.
(Toronto) (416)466- 0830

நித்தியகல்யாணி நகைமாளிகை
1487 Gerrad St East
(Toronto) (416)463- 3609

பீமா றெஸ்ரோரன்ட்
1450 Gerrad St East
(Toronto) (416)406- 2538
(416)406- 2735

J & J பூட் மாட் .
2580 Sheppard Ave. Unit. 30
(Mississauga) (905)281- 9300

தர்ஷனாஸ் . சுப்பர் மார்க்கட்
29 Dundas St East
(Mississauga) (905)270- 7576

விஜயாஸ் சில்க்
27 Dundas St East
(Mississauga) (905)273- 7997

சத்தியவேத திருச்சபையின்
ஞாயிறு தியான ஆராதனை

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."
(மத்தேயு 11:28

மாலை 3.00 மணிக்கு வாலிபர் கூட்டமும், சிறுவர்களுக்கு ஓய்வுநாள் பாடசாலையும், பெரியோர்களுக்கு வேதப்படிப்பும், மாலை 3.45மணிக்கு தியான ஆராதனையும் நடைபெறும். வாருங்கள் ஆறுதல் பெறுங்கள்.

மாதத்தின் முதல் ஞாயிறு திருவிருந்து பரிமாறப்படும்

இடம்:

1140 Bloor St.West
Dufferin & Bloor
Toronto
Dufferin (Subway)

"குமாரன் (இயேசு) உங்களை விடுதலையாக்கினால், மெய்யாகவே விடுதலையாவீர்கள்." (யோவான்8:36)